**நாள்-09.02.2021 (DW2)**

ஒ. எஸ். எண். 09/2018, திரு. கார்த்திகேயன், த/பெ.ராமுக்கண்ணு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

என்னுடைய பிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது நான் தாக்கல் செய்யும் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தை அதன் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரை குறியீடு செய்ய வேண்டப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது தகப்பனார் கையெழுத்து செய்து மற்றவர்கள் ஏற்றுக்கொண்டோம். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை, பிரமாண வாக்குமூலம் மற்றும் அறிவிப்புகள் அனைத்திலும் சொத்துக்கள் இராமக்கண்விற்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், அதை அவர் யாருக்கு வேண்டுமானாலும் எழுதி கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 1-வது அயிட்ட சொத்தில் 769 சதுரமீட்டர் மற்றும் தாவா 3-வது அயிட்ட சொத்து மற்றும் திருப்பதி செட்டியார் மண்டபம் ஆகியவற்றை எனது பெற்றோர் மற்றும் எனது அண்ணனும் எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார்கள். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா 1-வது அயிட்ட சொத்தில் 888.88 சதுர மீட்டர் அளவுள்ள இடத்தையும், தாவா 2-வது அயிட்டத்தில் கண்ட லெட்சுமி பிரியா மண்டபத்தையும், 3-வது அயிட்டத்தில் கண்ட காலி மனையிடத்தை நானும் எனது பெற்றோரும் சேர்ந்து 2-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.2 ஆகும். நான் தாவா 1,2 அயிட்ட சொத்துக்களில் திருமண மண்டபம் கட்டுவதற்காக மேற்படி சொத்துக்களை கறம்பக்குடி தொடக்க வேளாண்மை வங்கியில் அடமானம் வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பத்திரம் என்னிடம் காட்டப்படுவதுதான். அது வா.சா.ஆ.8 ஆகும். மேற்படி அடமானத்தில் நான், என் பெற்றோர், என் சகோதரர் மற்றும் என் சகோதரி லெட்சுமி பிரியாவிற்காக என் தந்தை காப்பாளராக இருந்து மேற்படி ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பாவுக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்தாக இருந்தால் வா.சா.ஆ.1,2 மற்றும் 8 ஆகிய ஆவணங்களில் ஏன் கையெழுத்து செய்தோம் என்றால் நாங்கள் என் தந்தையின் வாரிசுகள் என்பதால் கையெழுத்து போட்டு கொடுத்தோம். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் எனக்கும், என் தந்தைக்கும் மற்றும் என் சகோதரருக்கும்

சம பங்கு இருப்பதால்தான் அவ்வாறு கையெழுத்து போட்டு கொடுத்தோம் என்றால் சரியல்ல. வாதி பாகத்தை மோசடி செய்யவேண்டும் என்பதற்காக வா.சா.ஆ.1,2 ஐ தயார் செய்தோம் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் கிராமப்பகுதியில் தகப்பனார் சொத்து சம்மந்தமாக மகன்களிடம் கையெழுத்து போடுவது வழக்கம் என்பதை எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஏற்படுத்தியுள்ள எந்த ஆவணங்களிலும் மேற்படி விசயத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன கட்சி அனைத்தும் வழக்கிற்காக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் மூலமாக ஆலங்குடி சீனிவாசன் என்பவரிடம் தாவா 1,2 அயிட்ட சொத்து சம்மந்தமாக ஒப்பந்தம் போட்டு அதை ரத்து செய்தோம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்காக 30 சென்ட் நிலத்தை விற்றுள்ளோம். பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் மேற்படி சொத்து என் தங்கையின் திருமண செலவிற்காக விற்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணம் மூலமாக கார்த்திகேயன் என்பவரிடம் தாவா 1-வது அயிட்ட சொத்தை அடமானம் வைத்து பின்பு அதை மீட்டுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் என் தங்கையின் காதணிவிழாவிற்காக அடமானம் வைக்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வங்கியில் பெற்ற கடனை திரும்ப செல்விற்காகவும், பி.வா.சா.ஆ.4ல் குடும்ப செலவிற்காக என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தகவல்கள் எதையும் பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு மண்டபங்களும் கறம்பக்குடி டவுனில் அடுத்தடுத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி மண்டபங்களில் வருடத்திற்கு 50 லட்சம் வருமானம் வரும் என்றால் இல்லை வருடத்திற்கு 5 லட்சம் வருமானம் வரலாம். அந்த மண்டபத்தை ஒட்டி தற்போது கடைகள் கட்டி விட்டிருக்கின்றோம் என்றால் சரிதான். கடன் வாங்கி கட்டியுள்ளோம். கடை எதையும் வாடகைக்கு விடவில்லை. கடைகளை கட்டி வாடகைக்கு விட்டுள்ளோம் என்றாலும், தற்போது நீதிமன்றத்தில் வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் சரியல்ல. எனது தங்கைக்கு 100 பவுன் மற்றும் சீர் செய்ததற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் வீடியோ கேசட் உள்ளது. இதுவரை என் தங்கைக்கு பூப்புனித நீராட்டு விழாவே நடக்கவில்லை என்றாலும் அது நடந்து சீர் செய்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 25.05.2018-ம் தேதி சிவ மூர்த்தி என்பவருக்கு ஒப்பந்தம் போட்டுள்ளோம் என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படுவதுதான். அது வா.சா.ஆ.9 ஆகும். அதேபோல் 22.02.2018-ம் தாவா

3-வது அயிட்ட சொத்தில் 324.4 சதுரமீட்டர் இடத்தை என் மனைவி அருண்பிரியாவிற்கு தான செட்டில்மெண்ட எழுதிகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி மூலமாக வங்கியில் கடன் வாங்குவதற்காக மேற்படி தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளேன். வாதிக்கு பாகம் கொடுக்ககூடாது என்பதற்காக மேற்படி தான செட்டில்மெண்டை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடை வாடகை மற்றும் மண்டப வாடகையை வசூல் செய்கிறேன் என்றால் கடன்கொடுத்தவர்கள் பெற்றுச்செல்கிறார்கள். நாங்கள் ஏற்படுத்தியிருக்கும் வா.சா.ஆ.1,2 ஆவணம் வாதியின் பாகத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதியின் கணவர் தேவையில்லாத தொழில்களில் ஈடுபட்டு பணத்தை இழந்துவிட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதிக்கு பாகம் கொடுப்பது சம்மந்தமாக பஞ்சாயத்து நடந்தது என்றால் அம்மா, அப்பா பேசியிருக்கலாம் எனக்கு தெரியாது. பஞ்சாயத்து நடந்து வாதிக்கு 1/4 பாகம் கொடுக்க ஒத்துக்கொண்டு தற்போது இல்லை என்கிறேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்திற்குட்பட்டு மற்ற பிரதிவாதகிள் பாகம் கொடுக்க தயாராக உள்ளார்கள் என்றாலும், நான்தான் அதை தடுத்து வருகின்றேன் என்றாலும் சரியல்ல. சட்டப்படி வாதிக்கு 1/4 பாகம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.